**சுருக்கம்**

கல்வித் தகுதி – பொதுப்பணிகள் நியமனம் செய்ய தொழிற்கல்வி பட்டங்கள் (Professional Degrees) சட்டப் பட்டப் படிப்பு (B.L.) பொறியியல் பட்டப்படிப்பு (B.E), மருத்துவப் பட்டப்படிப்பு (M.B.B.S.) , கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு (B.V.Sc.) மற்றும் இளங்கலை அறிவியல் (வேளாண்மை) (B.Sc. Agri) ஆகியவற்றை இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் இளங்கலை அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு (B.A., B.Sc., etc) இணையாக கருதி அங்கீகரித்து – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை**

**அரசாணை (நிலை) எண். 139**

**நாள் : 07-10-2009**
**புரட்டாசி 21,**
**திருவள்ளுவர் ஆண்டு 2034**

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை (நிலை) எண் 318 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்(ஆர்) துறை நாள் 29–12–1997.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் செயலர் (பொறுப்பு) அவர்களின் கடித எண் 4642/ஆர்.என்.டி–அ5 / 98 நாள் 21–09–1998.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் நே.மு.க.எண் 2284/ ஆர்.என்.டி.–எப்1/08 நாள் 27–11–2008.

*******

**ஆணை :**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிற்கல்வியில் (Professional Degrees) அதாவது பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகிய துறைகளில் வழங்கப்படும் இளநிலை பட்டங்களையும் (B.E., M.B.B.S., B.V.Sc.,) மேல்நிலை பள்ளிக் கல்வித் தேர்ச்சிக்குப் பின்னர் 5 ஆண்டு சட்டப் படிப்பில் வழங்கப்படும் இளநிலை பட்டத்தையும் (B.L.,) இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப் படிப்புகளுக்குச் (B.A., B.Sc., B.Com.,) சமமாகக் கருதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணை வெளியிட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலர், இளங்கலை அறிவியல் (வேளாண்மை) படித்தவர்கள் தொகுதி VII-க்கான நேரடித் தேர்வில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளதாகவும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், இளங்கலை அறிவியல் (வேளாண்மை) பட்டம் சேர்க்கப்படாததால், அக்கல்வித்தகுதியையும் சேர்த்து மேற்குறிப்பிட்டுள்ள ஆணைக்கு திருத்தம் வெளியிடுமாறு கேட்டுகொண்டுள்ளார்.

3. மேலும், பார்வை 5–ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரின் நேர்முக கடிதத்திலும் 27–11–2008 நடந்த இணைக் கல்வி தகுதி நிர்ணய குழுவிலும் இளங்கலை அறிவியல் (வேளாண்மை) [B.Sc., (Agriculture)] மற்றும் இதர தொழிற்கல்வி பட்டங்களை இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப் படிப்புகளுக்குச் (B.A., B.Sc., B.Com.,) சமமாக கருதி பொதுப்பணிகளில் (Public Services) வேலைவாய்ப்பு வழங்க பரிந்துரைத்துள்ளது.

...2.

4. இக்குழுவின் பரிந்துரையினை அரசு தீவிரமாக பரிசீலனை செய்தபின், இதனை ஏற்றுக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் பத்தி 4ல், இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப்படிப்புகளுக்குச் (B.A., B.Sc., B.Com.,) சமமாக அரசு அங்கீகாரம் அளித்துள்ள தொழிற்கல்விகளுடன் சேர்த்து இளம் அறிவியல் (வேளாண்மை) [B.Sc. (Agriculture)] மற்றும் இதர தொழிற்கல்வி பட்டப்படிப்பினையும் சேர்த்து பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பு வழங்க அரசு அங்கீகாரம் அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.என். வெங்கட்ரமணன்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் தலைமைச் செயலகச் செயலாளர்கள், சென்னை – 9.
அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 2.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 35.
பதிவாளர், சென்னை பல்கலைக்கழகம், சென்னை – 5.

நகல்: -

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை– 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை – 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (மின்சாரம்), சென்னை – 9.
சிறப்பு நேர்முக எழுத்தாளர், அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத்துறை.
ப.ம.நி.சீ (நி.சீ.II) பிரிவு
இ.கோ./ உ.ந

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.